

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2023) நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவையை துவக்கி வைத்து, புறநோயாளி உள்நுழைவுச் சீட்டினை வழங்கினார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, உட்பட பலர் உள்ளனர்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணியின்

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.22

தி.மு.க. வழக்கறிஞர் அணி, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புது க்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்களுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், வருகிற 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), காலை 10.00 மணியளவில் திருவாரூர் "கலைஞர் கோட்டத்தில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக் கோட்டை வடக்கு, புதுக் கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! செ.தமிழ்வேந்தன் தலைமை!

# திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

### கே.பாக்யராஜ் -கரு பழனியப்பன் -குட்டி பத்மினி சிறப்புரை!

சென்னை நவ. 22 - சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதி கழக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை யொட்டி கதை, திரைக்கதை, வசனம், கலைஞர் என்றைக்கும் சிகரம்' நிகழ்ச்சி இன்று (22-11-2023- புதன் கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி ஹோம்ரா பவனில் நடைபெறுகின்றது.

நிகழ்விற்கு பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமை வகிக்கிறார். சரிதாமகேஷ்குமார், பி.உதய சங்கர், பெரம்பூர் ஆர். மகேஷ், தில்லைகதிரவன், பெரம்பூர் ஆர்.ராஜன், புல்லட் ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், எம்.ஏ.டீக்கா, எம். இசட். அபோபி, ஜி.கிருஷ்ண குமார், சே.மணிமாறன், வி. ஜெகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்விற்கு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி. கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

இதில் நடிகர்.கே.பாக்கியராஜ்,இயக்குனர்.கரு பழனியப்பன், நடிகை.குட்டி பத்மினி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் மேயர் பிரியாராஜன், கலாநிதிவீராசாமி எம்.பி, டி.தாயகம்கவி எம். எல்.ஏ அ.வெற்றிஅழகன். எம். எல்.ஏ ஜோசப்சாமுவேல் எம். எல்.ஏ ஐ.பரந்தாமன். எம். எல்.ஏ, வழக்கறிஞர்.கே.சந்துரு, பி.கே.மூர்த்தி,கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி. எப்.வ.முரளி தரன், வே.வாசு, கூ.பி.ஜெயின், செ.வேலு, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், எ.நாகராசன், வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், பி. ஜெ.துளசிங்கம், சி.மகேஷ்குமார், டி.லோகேஷ், வானவில்விஜய், எம்.பெரோஸ்கான், நா.துலுக்காணம், கா.ராஜ்முகமது, துரைகண்ணன், LFF. மோகன், புரசை தாமோதரன், டாக்டர் ஜி.சந்தகுமார், சுதாதி நதாயா என், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், க.பா. பிரதீப் குமார், ம.அசோக்குமார், கு.கிருஷ்ண மூர்த்தி, புனிதவதி எத்திராசன், மு.சரவணன், ரமணி லோகேஷ், எஸ். தமிழ்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மா. ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ் பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன், இரா. நரேந்திரன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயற்குழு - பாக நிலை முகவர்கள் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், நவ.22 - குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தேமாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயற்குழு மற்றும் பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம் இன்று 22.11.2023 புதன்கிழமை மாலை 04.30 மணியளவில் கோவூர் ப்ர்த்தி திருமண மண்டபத்தில் சிறுகுறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் இரா. நரேந்திரன் சிறப்புரையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துணை பெருந்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பாக நிலை முகவர்கள் (BLA 2), சிறப்பு அழைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நாடாளுமன்ற தேர்தல் பணி. கழக வளர்ச்சி.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமை! மாதவரம் வடக்கு பகுதி

# 19 வது வட்டக் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் கூட்டம்!

### புழல் எம்.நாராயணன் ஆலோசனை வழங்கினார்!

சென்னை, நவ. 22

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதி வட்ட தி.மு.க. சார்பில் பாக முகவர்கள் மற்றும் வட்ட நிர்வாகிகள் கூட்டம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தகர் அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மாவட்ட பிரதிநிதிகள் பி.நிர்மல்குமார், கே.ராஜா, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பா.கோபிநாத், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி. ஜெயராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் துரைசாமி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் துரை தசரதன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சேரலாதன், வட்டக் கழக நிர்வாகிகள் கோ.சரவணன், வக்கீல் திருமலை, துளசி, ரகுவரன், கோவர்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாக முகவர்கள் தமிழரசன், சுமன், சாந்தா நாகராஜ், சரஸ்வதி, அத்திகுளம் தேவி, ஞானசேகர், நேருநகர் சங்கர், கோபிநாத், சாந்தகுமார், பெரியநாயகி, போட்டோ பிரவீன், வாட்ச் மதிவாணன், அண்ணாதுரை, செல்வகுமார், நெடுஞ்செழியன், கலைச்செல்வி, செல்வராஜ், சுரேஷ்குமார், அஜித், ஜானகிராமன், கங்காதரன், கஸ்தூரி கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பாக முகவர்கள் வீடு வீடாக சென்று குடும்பத் தலைவர்களுடைய விவரங்களை தலைமைக் கழகம் கொடுத்துள்ள படிவத்தில் எவ்வாறெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் விளக்கி பாக அவர்களிடத்திலே உரையாற்றினார்.

மேலும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் கையெழுத்து பெறுவது குறித்தும் அதற்கான தபாலட்டைகளை பகுதிக் கழகத்தின் சார்பில் பாக முகவர்கள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் திரளாக இளைஞர்களை கொண்டு வந்து சேர்த்து மாநாட்டை சிறப்பிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் பாகம் முகவர்கள் பாக உறுப்பினர்கள் என்று நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அப்போலோ மருத்துவமனை நடத்திய மாபெரும் பொது மருத்துவ முகாமில் 300க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன் பெற்றனர். மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட அனைவருக்கும் இலவசமாக மருந்து மாத்திரைகளையும், ரொட்டி, பிஸ்கட் ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். 17 வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், சி.மூர்த்தி, சி.பாலாஜி, பா.கோபிநாத், எம்.ஜான்சன், கே.சண்முகப்ரியன், சுதர்சன், பூபாலன், என்.நாகராஜன், எம்.என்.அஜய் தென்னவன், எம்.விஜயன், சி.ஜோசப், வி.சுமீர், வக்கீல் எம்.என்.தளபதி, போட்டோ பிரவீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் தனியார் கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (20.11.2023) நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கலந்துகொண்டு, திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி ரூ.13.63 இலட்சம், கூட்டுறவு கல்வி நிதி ரூ.9.09 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் வழங்கினர். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் க.இராமகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

### எண்ணற்ற மக்களுக்கு கண்ணொளி பாய்ச்சியவர்!

# மருத்துவர் பத்ரிநாத் மறைவு! மருத்துவத் துறைக்கே பேரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 22 - எண்ணற்ற மக்களுக்கு கண்ணொளி பாய்ச்சிய மருத்துவர் பத்ரிநாத் அவர்களின் மறைவு மருத்துவத் துறைக்கே பேரிழப்பு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனர் புகழ் பெற்ற கண் மருத்துவர் எஸ்.எஸ்.பத்ரிநாத் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:



**சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனரும் புகழ் பெற்ற கண் மருத்துவருமான எஸ்.எஸ்.பத்ரிநாத் அவர்கள் மறைந்தார் என்றறிந்து வேதனையடைந்தேன்.**

**அமெரிக்காவில் உயர் படிப்புகளை முடித்து, இந்தியாவில் குறைந்த செலவில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற சேவை நோக்குடன் பத்ரிநாத் அவர்கள் தொடங்கிய சங்கர நேத்ராலயா மருத்துவமனை பல்கிப் பெருகி இன்று நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. இத்தகைய சேவைக்காக இந்திய அரசால் வழங்கப்படும் 'பத்மபூஷன்' விருதினையும் மருத்துவர் பத்ரிநாத் அவர்கள் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

**சங்கர நேத்ராலயா மூலம் பத்ரிநாத் அவர்கள் ஆற்றி வரும் பணிகளைப் பற்றி அறிந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் நானி பல்கிவாலா அவர்கள் பெரும் நிதியுதவியை அந்த மருத்துவமனைக்கு அளித்ததுடன், பின்னர் தனது சொத்துகள் அனைத்தையும் சங்கர நேத்ராலயாவுக்கு எழுதி வைத்தார் என்பதன் மூலம் இத்துறையில் பத்ரிநாத் அவர்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியலாம். எண்ணற்ற மக்களுக்குக் கண்ணொளி பாய்ச்சிய பத்ரிநாத் அவர்களது மறைவு மருத்துவத்துறைக்கே பேரிழப்பு.**

**எஸ்.எஸ்.பத்ரிநாத் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் மருத்துவத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் ஆதி திராவிடர் - பழங்குடியின

# விவசாயிகள் நிலம் வாங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தகவல்!

சென்னை, நவ. 22 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தலைமை அலுவலக கூட்ட அரங்கத்தில் நேற்று (21.11.2023) தாட்கோ தலைவர் உ.மதிவாணன் தலைமையில் தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி முன்னி லை யில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகள் நிலம் வாங்குவதற்கு குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜால் செய்யப்பட்டது .

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில் நேற்று (21.11.2023) இந்தியன் ஓவர் சீஸ் வங்கியுடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் நிலம் வாங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்யப்பட்டுள்ளது .

2022-23 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பின் படி 200 நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் நிலம்வாங்க ரூ. 10.00 கோடி மானியம் தாட்கோ மூலம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.74, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (சிஉதி) நாள். 10.09.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50 % அல்லது அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும் இத்திட்டத்தின் மூலம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 200 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் நிலமற்ற விவசாயிகள் பயன் பெறும் வகையில் ரூ. 375.00 இலட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டு 87 விவசாயிகள் நிலம் வாங்கி பயனடைந்துள்ளார்கள்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களுடைய நில உடைமையை அதிகரிக்க அரசு தாட்கோ மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டபோது அவர்களுக்கு எளிய முறையில் வங்கியில் நிதி வசதி கிடைக்காததால், பயனாளிகள் நிலம் வாங்கும் திட்டத்தில் சொற்ப அளவே பயன் அடைந்தார்கள். பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு தாட்கோ மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தற்போழுது தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழக நிதியிலிருந்து நிதியினை பெற்று பயனாளிகளுக்கு 6 % மிக குறைந்த வட்டியில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் கடனுடன் மானியம் பெற புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கி நிர்வாக இயக்குநர் சஞ்சய் விநாயக் முதலியார், இந்தியன் ஓவர் சீஸ்வங்கி, பொது மேலாளர், எம்.மோகன், தாட்கோ, பொதுமேலாளர் (நிர்வாகம்) திருமதி. தா. பரிதா பானு தாட்கோ, மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# தஞ்சை கூத்தரசனின் 78 வது ஆண்டு பிறந்த நாள் விழா!

### கழக இலக்கிய அணிப் பொருளாளர் நா.சந்திரபாபு அறிக்கை!

சென்னை, நவ. 22 - தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் அரிமா முனைவர் நா.சந்திரபாபு தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தி.மு.க.வின் முன்னணிப் பேச்சாளரும் கழகத் தலைமை இலக்கிய அணியின் புரவலருமான தஞ்சை கூத்தரசனின் 78வது ஆண்டு பிறந்த நாள் 24.11.2023 அன்று வருகிறது.

24.11.1946 ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு 78 வது ஆண்டு பிறந்த நாள் விழாவும், 24.11.1951 ல் பிறந்த அவரது துணைவியார் திருமதி இந்துமதிக்கு 73வது ஆண்டு பிறந்த நாள் விழாவும் 24.11.2023 அன்று ஒரு சேர வருகிறது.

இவர்கள் இருவரின் பிறந்த நாள் விழா, 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், சந்திரசேகர் பவுண்டேசன், ஜி.3, டாக்டர். விசுவேசு அபார்ட்மெண்ட், எண்: 50 / 52 முத்து முதலிதெரு, இராயப்பேட்டை, சென்னை- 600 014 (தொலைபேசி எண்: 044 - 28350894, செல்பேசி எண்கள் : 90030 90686, 94441 77737) எனும் முகவரியில் உள்ள தஞ்சை. கூத்தரசனின் சென்னை இல்லத்தில் எளிமையாக நடைபெறவிருக்கிறது. கழகக் கண்மணிகள் அனைவரும் தஞ்சை.கூத்தரசன் - திருமதி.இந்துமதி இணையரை வாழ்த்திடும்படி பேரன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



தாட்கோ தலைமையக அரங்கத்தில் (21.11.2023) நேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் நிலம் வாங்குவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் மானியத்துடன் குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நிர்வாக இயக்குனர் சஞ்சய் விநாயக் முதலியார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பொது மேலாளர் எம்.மோகன், தாட்கோ பொது மேலாளர் தா.பரிதா பானு ஆகியோர் கலந்து கொண்டனர்.